செ.வெ.எண்: 57 நாள்: 26.09.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்து அரசியல் கட்சியினர் மற்றும் வேட்பாளர்கள் தேர்தல் நடத்தை விதிகளை முறையாக கடைபிடிக்க வேண்டும் - மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் உள்ளாட்சி சாதாரண தேர்தல்கள் 2016 குறித்த பத்திரிகையாளர் சந்திப்பு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (26-9-2016) நடைபெற்றது.

இந்த பத்திரிகையாளர் சந்திப்பில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

தமிழகத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் தேதியினை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதன்படி நமது மாவட்டத்தில் உள்ளாட்சி சாதாரண தேர்தல்கள் 17.10.2016 மற்றும் 19.10.2016 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளது. தேர்தலில் போட்டியிடுபவர்கள் 26.09.2016 முதல் 03.10.2016 வரை வேட்பு மனு தாக்கல் செய்யலாம். பெறப்பட்ட வேட்பு மனுக்கள் 04.10.2016 அன்று ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். வேட்பு மனுக்களை திரும்ப பெற கடைசி நாள் 06.10.2016. வாக்குப்பதிவு 17.10.2016 மற்றும் 19.10.2016 ஆகிய தேதிகளில் நடைபெறும். வாக்கு எண்ணிக்கை 21.10.2016ல் நடைபெறும்.

நமது மாவட்டத்தில் ஊரகப் பகுதிகளில் மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் 22ம், ஊராட்சி ஒன்றியக்குழு வார்டு உறுப்பினர் 225ம், கிராம ஊராட்சித்தலைவர் 497ம், கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் 3807ம், நகர்பகுதிகளில் நகர் மன்ற உறுப்பினர் 69ம், பேரூராட்சி வார்டு உறுப்பினர் 120ம் என மொத்தம் 4740 எண்ணிக்கையில் உள்ள உள்ளாட்சி அமைப்பின் பதவிகள் தேர்தல் மூலம் நிரப்பப்பட உள்ளது. மாவட்ட ஊராட்சித்தலைவர், துணைத்தலைவர், ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர், துணைத்தலைவர், சிற்றூராட்சி துணைத்தலைவர், பேரூராட்சித்தலைவர் துணைத்தலைவர், நகர்மன்றத்தலைவர் மற்றும் துணைத்தலைவர் ஆகிய பதவியிடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை கொண்டு 02.11.2016 அன்று நடத்தப்படும் மறைமுகத்தேர்தல் மூலம் நிரப்பப்படும்.


புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் உள்ளாட்சி சாதாரண தேர்தல்கள் 2016 குறித்த பத்திரிகையாளர் சந்திப்பு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (26-9-2016) நடைபெற்றது.

நமது மாவட்டத்தில் ஊரகப்பகுதிகளில் 511783 ஆண் வாக்காளர்களும், 511914 பெண் வாக்காளர்களும், 9 இதர வாக்காளர்களும் என மொத்தம் 1023706 வாக்காளர்கள் உள்ளனர். நகராட்சி பகுதிகளில் 72738 ஆண் வாக்காளர்களும், 77228 பெண் வாக்காளர்களும், 7 இதர வாக்காளர்களும் என மொத்தம் 149973 வாக்காளர்கள் உள்ளனர். பேரூராட்சி பகுதிகளில் 35363 ஆண் வாக்காளர்களும், 35725 பெண் வாக்காளர்களும், 2 இதர வாக்காளர்களும் என மொத்தம் 71090 வாக்காளர்கள் உள்ளனர். இதன் மூலம் நமது மாவட்டத்தில் மொத்தம் 619884 ஆண் வாக்காளர்களும், 624867 பெண் வாக்காளர்களும், 18 இதர வாக்காளர்களும் என ஆக மொத்தம் 1244769 வாக்காளர்கள் உள்ளனர்.

உள்ளாட்சி தேர்தல் நடைபெறும் ஊரகப்பகுதிகளில் 35 ஆண் வாக்குச்சாவடிகளும், 35 பெண் வாக்குச்சாவடிகளும், 2183 அனைத்து வாக்காளர்களுக்கான வாக்குச்சாவடிகளும் என மொத்தம் 2253 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. நகராட்சிப் பகுதிகளில் 53 ஆண் வாக்குச்சாவடிகளும், 53 பெண் வாக்குச்சாவடிகளும், 46 அனைத்து வாக்காளர்களுக்கான வாக்குச்சாவடிகளும் என மொத்தம் 152 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது.

..2..



பேரூராட்சி பகுதிகளில் 1 ஆண் வாக்குச்சாவடியும், 1 பெண் வாக்குச்சாவடியும், 119 அனைத்து வாக்காளர்களுக்கான வாக்குச்சாவடிகளும் என மொத்தம் 121 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நமது மாவட்டத்தில் 89 ஆண் வாக்குச்சாவடிகளும், 89 பெண் வாக்குச்சாவடிகளும், 2348 அனைத்து வாக்காளர்களுக்கான வாக்குச்சாவடிகளும் என மொத்தம் 2526 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி தேர்தலை சிறப்பாக நடத்தும் வகையில் ஊரகப் பகுதிகளில் 29 தேர்தல் நடத்தும் அலுவலர்களும், 656 தேர்தல் நடத்தும் உதவி அலுவலர்களும் என மொத்தம் 685 அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நகராட்சிப் பகுதிகளில் 2 தேர்தல் நடத்தும் அலுவலர்களும், 8 தேர்தல் நடத்தும் உதவி அலுவலர்களும் என மொத்தம் 10 அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பேரூராட்சிப்பகுதிகளில் 8 தேர்தல் நடத்தும் அலுவலர்களும், 16 தேர்தல் நடத்தும் உதவி அலுவலர்களும் என மொத்தம் 24 அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் நமது மாவட்டத்தில் 719 அலுவலர்கள் தேர்தல் நடத்த நியமிக்கப்பட்டுள்ளனர். உள்ளாட்சி தேர்தலில் ஊரகப்பகுதிகளில் 16900 வாக்குப்பதிவு அலுவலர்களும், நகராட்சிப் பகுதிகளில் 1078 வாக்குப்பதிவு அலுவலர்களும், பேரூராட்சிப் பகுதிகளில் 517 வாக்குப்பதிவு அலுவலர்களும் என மொத்தம் 18495 வாக்குப்பதிவு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நமது மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தலில் 17.10.2016 அன்று அன்னவாசல், கந்தர்வக்கோட்டை, கறம்பக்குடி, குன்றாண்டார்கோவில், புதுக்கோட்டை, விராலிமலை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களும், அன்னவாசல், இலுப்பூர், கறம்பக்குடி, கீரனூர் ஆகிய பேரூராட்சிகளும், புதுக்கோட்டை நகராட்சி ஆகிய பகுதிகளில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. மேலும் 19.10.2016 அன்று அறந்தாங்கி, அரிமளம், ஆவுடையார்கோவில், பொன்னமராவதி, மணமேல்குடி, திருமயம், திருவரங்குளம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களும், அரிமளம், ஆலங்குடி, கீரமங்கலம், பொன்னமராவதி ஆகிய பேரூராட்சிகளும், அறந்தாங்கி நகராட்சி ஆகிய பகுதிகளில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் மற்றும் ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர், நகர்ப்புற உள்ளாட்சிகளில் மாநகராட்சி மன்ற உறுப்பினர், நகராட்சி மன்ற உறுப்பினர், பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் ஆகிய பதவியிடங்களுக்கு கட்சி அடிப்படையிலும், ஊரக உள்ளாட்சிகளில் கிராம ஊராட்சித்தலைவர் மற்றும் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கு தேர்தல்கள் கட்சி அடிப்படையில் அல்லாமல் தேர்தல்கள் நடைபெறும்.

மேலும் தேர்தலில் போட்டியிடுபவர்கள் வேட்பு மனு தாக்கல் செய்யும் பொழுது வைப்புத்தொகையாக கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தலில் போட்டியிடுபவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ரூ.100ம், இதர பிரிவினர் ரூ.200ம், கிராம ஊராட்சி தலைவர் தேர்தலில் போட்டியிடுபவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ரூ.300ம், இதர பிரிவினர் ரூ.600ம், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் தேர்தலில் போட்டியிடுபவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ரூ.300ம், இதர பிரிவினர்

ரூ.600ம், மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தலில் போட்டியிடுபவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ரூ.500ம், இதர பிரிவினர் ரூ.1000ம், பேரூராட்சி, 3ம்நிலை நகராட்சி வார்டு உறுப்பினர் தேர்தலில் போட்டியிடுபவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ரூ.250ம், இதர பிரிவினர் ரூ.500ம், நகராட்சி மன்ற வார்டு உறுப்பினர் தேர்தலில் போட்டியிடுபவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ரூ.500ம், இதர பிரிவினர் ரூ.1000ம் வைப்புத்தொகையாக செலுத்த வேண்டும்.





தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அதிகப்பட்ச செலவுத்தொகை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவிக்கு ரூ.9000ம், கிராம ஊராட்சி தலைவர் பதவிக்கு ரூ.34000ம், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவிக்கு ரூ.85000ம், மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவிக்கு ரூ.170000ம், பேரூராட்சி, 3ம் நிலை நகராட்சி வார்டு உறுப்பினர் பதவிக்கு ரூ.17000ம், நகராட்சி மன்ற உறுப்பினர் (முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை) ரூ.34000ம், நகராட்சி மன்ற உறுப்பினர் (தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை) ரூ.85000ம் என அதிகபட்ச தேர்தல் செலவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நமது மாவட்டத்தில் வாக்காளர்கள் அச்சமின்றி வாக்களிக்கும் வகையில் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் உள்ளதால் அனைத்து அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் தேர்தல் நடத்தை விதிகளை தவறாமல் கடைபிடிக்க வேண்டும் என்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) (பொ) திரு.முருகண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**